## மே - 16 - செவ்வாய்
### புனித சைமன் இஸ்போக்
### “என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன்’’
### (யோவா. 14:27)

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 14 : 19 – 28**

அக்காலத்தில் அந்தியோக்கியாவிலிருந்தும் யூதர்கள் வந்து மக்களைத் தூண்டிவிட்டு, பவுல் மேல் கல் எறிந்தார்கள் அவர் இறந்து விட்டார் என்று எண்ணி நகருக்கு வெளியே அவரை இழுத்துப்போட்டார்கள். சீடர்கள் அவரைச் சூழ்ந்து நின்றபோது அவர் எழுந்து நகரினுள் சென்றார். மறுநாள் அவர் பர்னபாவுடன் தெருபைக்குப் புறப்பட்டுச் சென்றார். அந்த நகரில் அவர்கள் நற்செய்தி அறிவித்துப் பலரைச் சீடராக்கிய பின் லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோக்கியா ஆகிய நகரங்களுக்குத் திரும்பி வந்தார்கள். அங்குள்ள சீடர்களின் உள்ளத்தை அவர்கள் உறுதிப்படுத்தி, ”நாம் பலவேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்” என்று கூறி நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவித்தார்கள். அவர்கள் ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவனிடம் வேண்டித் தாங்கள் நம்பிக்கை கொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள். பின்பு பிசிதியா வழியாகப் பம்பிலியா வந்தார்கள். பெருகை நகரில் இறைவார்த்தையை அறிவித்தபின் அத்தாலியா வந்தார்கள். அங்கிருந்து கப்பலேறி அந்தியோக்கியா வந்தார்கள் அங்குதான் அவர்கள் அருள் வழங்கும் கடவுளின் பணிக்கென்று அர்ப்பணிக்கப்பட்டார்கள். இப்போது அப்பணியைச் செய்து முடித்து விட்டார்கள். அவர்கள் அங்கு வந்ததும் திருச்சபையைக் கூட்டி, கடவுள் தங்கள் வழியாகச் செய்த அனைத்தையும், அவர் பிற இனத்தவர்க்கு நம்பிக்கை கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்ததையும் அறிவித்தார்கள். அங்கே அவர்கள் சீடர்களுடன் பல நாள்கள் தங்கினார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் மக்கள் உம் அரசின் மாட்சியை அறிவிப்பர்

**நற்செய்தி : யோவான் 14 : 27 – 31**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, “அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் மருள வேண்டாம். ”நான் போகிறேன், பின் உங்களிடம் திரும்பி வருவேன்” என்று நான் உங்களிடம் சொன்னதைக் கேட்டீர்களே! நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் நான் தந்தையிடம் செல்வது பற்றி மகிழ்ச்சி அடைவீர்கள். ஏனெனில் தந்தை என்னைவிடப் பெரியவர். இவை நிகழும்போது நீங்கள் நம்புமாறு இப்போதே, இவை நிகழுமுன்பே, சொல்லி விட்டேன். இனி நான் உங்களோடு மிகுதியாக பேசப் போவதில்லை ஏனெனில் இவ்வுலகின் தலைவன் வந்து கொண்டிருக்கின்றான். அவனுக்கு என் மேல் அதிகாரம் இல்லை. ஆனால் நான் தந்தையின் மீது அன்பு கொண்டுள்ளேன் என்பதையும் அவர் எனக்குக் கட்டளையிட்டபடி செயல்படுகிறேன் என்பதையும் உலகு தெரிந்து கொள்ள வேண்டும். எழுந்திருங்கள், இங்கிருந்து போவோம“ என்றார்.

**தியானம்:** ‘நான் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்று அல்ல’’ என்கின்றார் இயேசு. உலகம் தருகின்ற அமைதி நிலையான அமைதி அல்ல. வாழ்வில் எந்தவேளையிலும் இது அழிந்துவிடக்கூடிய அமைதி. கவலைகளை, சவால்களைச் சந்திக்கும் பொழுது மாயமாய் மறைந்து விடும். ஆனால் இறைமகன் இயேசு தருகின்ற அமைதியோ நிலையானது, நெஞ்சத்தில் நிறைந்து நிற்பது, எல்லாச் சூழ்நிலைகளிலும் மனிதர்களை வாழவைக்கும் அமைதியது. உயிர்த்த இயேசுவின் நற்செய்தியை உலகெங்கும் பரப்பிய திருத்தாதர்களின் வாழ்வில் இந்த அமைதியை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக இன்றைய முதல் வாசகத்தில் இறையரசு பணிக்குரிய பயணத்தில் பவுலும் பர்ணபாவும் எதிர்கொண்ட இன்னல்களையும், அவற்றின் மத்தியிலும் அவர்கள் துணிவோடு பிறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவித்ததையும் பார்க்கின்றோம். இவ்வாறு இயேசுவின் அமைதி அவர்களோடு இரண்டறக் கலந்திருந்தது. இதுவே இயேசுவில் நிலைத்திருக்கச் செய்தது. அமைதியே உருவான இயேசு இன்று கலக்கத்தில், பதற்றத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மோடு தமது அமைதியை பகிர்ந்து கொள்கின்றார். அதைப் பெற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோமா? நாம் இறைவனோடும், அயலவர்களோடும் நல்ல உறவு கொள்வது நல்ல அமைதியின் அடையாளம். அமைதியின் மக்களாக வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார்.